# மாதிரி அரையாண்டுத்தேர்வு–2022–23

தேர்வு எண் | | | | | | |

வகுப்பு : 11

## பொருளியல்

காலம் :3.00

மதிப்பெண்கள்:90

### Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** **20 x 1 = 20**

1. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?
   அ) விலை ஆ) இலாபம் இ) மொத்த செலவு ஈ) இறுதி சமநிலை வருவாய்
2. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்
   அ) இலயனல் ராபின்ஸ் ஆ) ஆடம்ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) சாமுவெல்சன்
3. சம அளவு திருப்தியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடு இதனுடன் தொடர்புடையது
   அ) சமநோக்கு வளைகோடுகள் ஆ) இயல்பெண் ஆய்வு இ) தேவை விதி ஈ) அளிப்பு விதி
4. ஓர் அலகு உற்பத்தி காரணியை அதிகரிக்கும்போது கிடைக்கும் உற்பத்தி…..
   அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி இ) சராசரி உற்பத்தி ஈ) இவை அனைத்தும்
5. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான செலவு என்பது
   அ) உள்ளுறு செலவு ஆ) வெளியுறு செலவு இ) பொருளாதார செலவு ஈ) இவை அனைத்தும்
6. நீண்டகால சராசரி செலவுக்கோடு ……….என அழைக்கப்படுகிறது.
   அ) திட்ட வளைகோடு ஆ) உறை வடிவ வளைகோடு இ) இவை இரண்டும் ஈ) எதுவும் இல்லை
7. கீழ்கண்டவற்றுள் எந்த வகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும்
   அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமைப்போட்டி இ) முற்றுரிமை ஈ) இருமுக முற்றுரிமை
8. முற்றுரிமையில் MR கோடு …………….கோட்டிற்கு கீழிருக்கும்
   அ) TR ஆ) MC இ) AR ஈ) AC
9. உழைப்பாளர்களுக்கான வெகுமதி
   அ) வாரம் ஆ) கூலி இ) வட்டி ஈ) இலாபம்
10. ஒரு உற்பத்திக் காரணி பெறக்கூடிய உண்மை வருமானத்திற்கும் அதன் மாற்று வருவாய்க்கும் உள்ள வேறுபாடு அ) போலிவாரம் ஆ) இலாப வாரம் இ) வாரம் ஈ) இவை அனைத்தும்
11. வலுவான பொருளாதாரங்களை கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியாவின் இடம்
    அ) 4 ஆ) 17 இ) 7 ஈ) 8
12. ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது அ) குழந்தை இறப்பு வீதம்
    ஆ) மகப்பேறு இறப்பு வீதம் இ) இளைஞர் இறப்பு வீதம் ஈ) கச்சா பிறப்பு வீதம்
13. திட்டக்குழுவிற்கு மாற்றாக நிதி ஆயோக் அமைக்கப்பட்ட நாள்…..
    அ) 2015 ஜனவரி1 ஆ) 2015 ஜனவரி10 இ) 2015 ஜனவரி12 ஈ) 2015 ஜனவரி26
14. 1969-ல் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை
    அ) 14 ஆ) 16 இ) 12 ஈ) 10
15. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம்……ல் ஏற்படுத்தப்பட்டது
    அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சின்
16. GST-யில் அதிகபட்ச வரிவிதிப்பு
    அ) 18% ஆ) 24% இ) 28% ஈ) 32%
17. ctrl + m என்ற ஆணை இதற்கு பயன்படுகிறது
    அ) புதிய நகல் எடுக்க ஆ) புதிய நழுமத்தை பெற இ) சேமிக்க ஈ) நழுமத்தை நீக்க
18. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்
    அ) கோயம்புத்தூர் ஆ) திருப்பூர் இ) ஈரோடு ஈ) கரூர்
19. தேவைக்கும் அதிகமாக தொழிளாளர்கள் வேலையில் ஈடுபடும் நிலைமை
    அ) மறைமுக வேலையின்மை ஆ) உப வேலைவாய்ப்பு
    இ) வெளிப்படை வேலையின்மை ஈ)சுய வேலைவாய்ப்பு
20. ஊரகப்பகுதி ஊரக மக்கள் ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது
    அ)ஊரகப் பொருளாதாரம் ஆ) ஊரக வளர்ச்சி இ) ஊரக மேம்பாடு ஈ) இவை அனைத்தும்

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண்30–க்கு கட்டாயம் விடையளி** **7X2=14**

21. நுண் பொருளியல் என்றால் என்ன ?
22. கிஃபன் பொருள்கள் எவை ? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
23. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக
24. மாறாச் செலவு என்றால் என்ன ?
25. விற்பனைச் செலவு என்றால் என்ன ?
26. உண்மைக்கூலிக்கும் பணக்கூலிக்கும் உள்ள வேறுபாடு யாது ?
27. இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக்கூறு.
28. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை ?
29. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன ?.
30. 62=34+4X என்றால் X இன் மதிப்பு காண்.

## Part-III

**III .ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி. ?
32. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை ?
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
.34..வாய்ப்புச் செலவு என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
35. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
36. நலப் பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை கூறுக.
37. வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
38. GST என்றால் என்ன ? அதன் நன்மைகளை எழுது
39. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.
40. கணித முறையின் பொருளாதார பயன்பாடுகளை விளக்குக

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41.அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
ஆ). விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக

42.அ) தேவை விதியினை விவரமாக எழுதுக . (அல்லது)
ஆ) பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக.

43.அ) முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ? (அல்லது)
ஆ) நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும்.

44.அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி. (அல்லது)
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி

45. அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.. ((அல்லது)
ஆ ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க..

46. அ) தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி. (அல்லது)
ஆ) குறைந்து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக ?

47. அ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி . (அல்லது)
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

A.Alexis.P.G Teacher (Economics) Don Bosco Hr.Sec.School.Varadarajanpet. Ariyalur Dt. Cell: 9543776128
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com